[23rd September 1958

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்போது ஆசனப்பயிற்சியும் கற்றுக் கொடுக்கப்பட்டு வருகின்றன. இதற்காக ஆசிரியர்களும் அமர்த்தப் பட்டிருக்கின்றனர்.

SRI P. G. MANICKAM : ஸார், இந்த பயிற்சி பெற்றவர்களை லோயர் கிரேட் என்றும், ஹையர் கிரேட் என்றும் இரண்டு பிரிவுகளாக பிரிக்கப் பட்டிருக்கிறது. இந்த இரண்டு கிரேடுகளையும் மாற்றி ஒரே கிரேடாக வைப்பதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதில் எஸ். எஸ். எல். ஸி. பாஸ் செய்தவர்களுக்கு ஒரு கிரேடும், டிகிரி பெற்றவர்களுக்கு டிப்ளோமா என்று ஒரு பிரிவும் இருக்கவேண்டியது அவசியம் என்று கருதிதான் இவ்விதம் இரண்டு பிரிவுகள் வைக்கப்பட்டிருக்கிறது.

District Board Teachers, Madurai

*433 *Q.*—SRI N. R. THIAGARAJAN : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) மதுரை ஜில்லா போர்டில் 1954 முதல் 1957 அக்டோபர் முடிய எத்தனை ஆசிரியர்கள் மாற்றப்பட்டார்கள் ?

(ஆ) 1957 ஜனவரி முதல் அக்டோபர் முடிய எத்தனை ஆசிரியர்கள் மாற்றப்பட்டார்கள் ?

(இ) கலெக்டரிடம் சார்ஜ் கொடுக்கும் முதல் மாதத்தில் எத்தனை ஆசிரியர்கள் மாற்றப்பட்டார்கள் ?

(ஈ) என்ன காரணத்திற்காக மாற்றப்பட்டார்கள் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) to (*d*) A statement [a] is placed on the table of the House.

SRI N. R. THIAGARAJAN : அரசியல் காரணங்களுக்காக தங்களுக்கு சாதகமாக இல்லை என்ற காரணத்தின் பேரில் இவ்விதம் மாற்றப்பட்டதாகத் தெரிகிறது. இதற்காக சுமார் 50 ஆயிரம் ரூபாய் வரை செலவு ஏற்பட்டதும் வாஸ்தவம் என்று நினைக்கிறேன். இந்த ரூபாய் அவர்களிடமிருந்து வசூலிக்கப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதைப்பற்றி புகார்கள் வந்தன. இதன் பேரில் விசாரணை செய்ததில் புகாருக்கு ஆதாரங்கள் இருந்ததின் பேரில் இவ்விதம் மாற்றப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. நமது ஜனநாயக முறையில் இம்மாதிரி நஷ்டங்களுக்கும் தயாராகத்தான் இருக்கவேண்டும். நாம் இப்போது பஞ்சாயத் யூனியன், பஞ்சாயத் இவைகளைப்பற்றி ஆலோசித்துக்கொண்டிருக்கிறோம். இவைகளையும் அப்போது மனதில் வைத்துக்கொள்ளவேண்டும் என்று கனம் அங்கத்தினர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

SRI K. R. VISWANATHAN : ஸார், இம்மாதிரியான ஆசிரியர்களை மாற்றும்போது அரசாங்கத்தின் கொள்கையை எல்லா இடங்களிலும் அனுசரிப்பதாக தெரியவில்லை. ஆகவே எல்லா ஜில்லாக்களுக்கும் ஒரே விதமாக அரசாங்கத்தின் கொள்கையை அனுசரிப்பதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதில் விதிகள் போடுவது ஒன்று, ஆனால் அனுசரிப்பது இன்னொன்று. கனம் அங்கத்தினர் தியாகராஜன் அவர்கள் கேட்டிருப்பது இவ்விதம் விதிகளை மீறி இவ்விதம் மாற்றப்பட்டிருப்பது சரியா என்பது. இம்மாதிரி அந்தந்த டிஸ்ட்ரிக்ட் போர்டு செய்யும் பொழுது அந்த டிஸ்டிரிக்ட் போர்ட் பிரசிடெண்டின் மீது நடவடிக்கை எடுப்பது அரசாங்கத்திற்கு சிரமமாயிருக்கிறது.

---

[a] Printed as Appendix I on page 575 infra.

23rd September 1958]

SRI S. NAGARAJA MONIGAR : இம்மாதிரியான பெருவாரியான மாறுதல்கள் நடந்து வருவதால் இதைப்பற்றி புகார்கள் வருகின்றன. ஆகவே இம்மாதிரியாக அளவு கடந்த முறையில் மாறுதல் நடவாதவாறு எதிர்காலத்தில் சர்க்கார் ஒரு நடைமுறையை கையாளுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்போது நாம் ஜில்லா போர்டுகளின் முடிவு காலத்தைப்பற்றி ஆலோசித்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே இதைப்பற்றி பேசவும் விவாதிக்கவேண்டிய அவசியம் இல்லை என்று நினைக்கிறேன்.

SRI S. LAZAR : ஸார், இம்மாதிரி தவறிழைக்கின்றவர்களை மாற்றுவதற்கு பதிலாக தண்டிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு ஒரு நடைமுறையை சர்க்கார் கையாளுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : சாதாரணமாக ஆசிரியர்கள் பெரிய குற்றம் செய்தால்தான் தண்டிக்க முடியும். சிறிய குற்றங்களுக்கு எல்லாம் தண்டிக்க முடியாது. இம்மாதிரி இடமாற்றுவதே போதுமான தண்டனையாக ஆகிவிடுகிறது. ஆனால் நாம் இப்போது டிஸ்ட்ரிக்ட் போர்டையே மாற்றுவதற்கு ஆலோசித்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே இதைப்பற்றி கூடுதலாக கவனிக்கவேண்டிய அவசியமில்லை.

SRI N. R. THIAGARAJAN : இப்போது அனாவசியமாக இடமாற்றம் செய்ததை மாற்றி பழைய இடத்திற்கே திரும்பி மாற்றிக் கொடுப்பதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்படி செய்தால் இன்னும் ஒரு தடவை உபத்திரவம் கொடுப்பது போலாகும். ஆகவே இதைப்பற்றி அவசியம் என்றிருக்குமானால் அங்கங்கு இருக்கக்கூடிய ஸ்பெஷல் ஆபீஸர்கள் மாற்றம் செய்வார்கள் என்று நம்புகிறேன்.

Medical Colleges

* 434 *Q.*—SRI N. R. THIAGARAJAN : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) சென்னை ராஜ்ய வைத்தியக் கல்லூரிகளில் சென்ற பத்தாண்டுகளில் இண்டர்மீடியட்டில் 3-வது வகுப்பில் தேரிய மாணவர்கள் எத்தனை பேர் வைத்தியப்படிப்புக்கு அனுமதிக்கப்பட்டார்கள் ?

(ஆ) அதில் எத்தனை பேர் பத்தாண்டுகளுக்கு மேலாக வைத்தியக் கல்லூரிகளில் படித்துக்கொண்டு இருக்கிறார்கள் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) & (*b*) As the selections were made on the basis of the marks obtained by the candidates in Part III Optionals of the Intermediate Examination without reference to the classes obtained in the examination, the information is not available.

SRI N. R. THIAGARAJAN : ஸார், எனக்கு தெரிந்த அளவில் எங்கள் ஊர்வாசிகளில் சிலர் 10, 12, 16 வருடங்கள் கூட இந்த வைத்தியக் கல்லூரியில் தொடர்ந்து படித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஏதேனும் ஒரு நிவர்த்தி மார்க்கம் செய்து கொடுக்க சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இவ்வளவு நாட்களாக அங்கே படித்துக்கொண்டிருப்பது, ஒருவேளை பாண்டிய நாட்டின் பண்போ என்னவோ தெரியவில்லை. (சிரிப்பு.)